6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி

(ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (7-11-2003) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

25. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்-அலுவல்முறை ஒழுங்குமுறை விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 5-7-2002 ஆம் நாளிட்ட எண் TNERC/CBR/1/1-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

26. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்-மாநில ஆலோசனைக் குழு ஒழுங்குமுறை விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 5-7-2002 ஆம் நாளிட்ட எண் TNERC/SACR/2/1-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1998-ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

27. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்-கலந்தாய்வு உரைஞர்களின் நியமன ஒழுங்குமுறை விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 5-7-2002 ஆம் நாளிட்ட எண் TNERC/ACR/3/1-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

28. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் கட்டண ஒழுங்குமுறை விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 19-7-2002 ஆம் நாளிட்ட எண் TNERC/TR/5/1-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

29. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் கட்டணம் மற்றும் அபராத ஒழுங்குமுறை விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 25-9-2002 ஆம் நாளிட்ட எண் TNERC/Regulations/F&F/4/1-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

30. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் இருப்பத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

31. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை (1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)